மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மீனவர்கள்பால் அன்பு கொண்டு, வருடந்தோறும் இரண்டயிரம் வீடுகள் கட்டித்தர உத்தரவிட்டுள்ளார்கள். இந்த அடிப்படையில் 1992-93-ஆம் ஆண்டிற்குள் இரண்டாயிரம் வீடுகள் இலவசமாகக் கட்டித்தரப் தரப்படுகிறது. சுமார் 442 கிராமங்களிலே வசிக்கும் மீனவர் களுக்கு, இதுவரையிலே 180 கிராமங்ளுக்கு இலவசமாக 13,862 வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. இன்னும் பல கிராமங் களில் இந்தத் திட்டம் நிறைவு செய்யப்படவிருக்கிறது, அந்த வகையில் கணக்கை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம், அது வந்தவுடன் அட்லீஸ்ட் 'பேஸ்டு மானரி'லானது இதைசெய்யலாம் என்று இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 80 திரு. ஏ.எம். பரமசிவன, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

80—

வாடிப்பட்டித் தாலுக்காவில் அரசு தொழில் பேட்டை

9074 திரு. ஏ. எம். பரமசிவன்:

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுகு விடையளிப்பாரா;

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகாவில் சிறு தொழில் துவங்க முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் அரசு தொழில் பேட்டை உருவாக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு.எஸ்.நாகூர் மீரான், ஊரகத்தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகாவில் தொழிற்பேட்டை அமைக்க குறைந்த பட்சம் 10 தொழில் முனைவோர்கள் முன் வருவார்களேயானால் சிட்கோ உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு.ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பிற்பட்ட பகுதியாக இருக்கிறது. அது தொழில் பகுதியாக அறிவிக்கப்பட்ட காரணத் தால் அங்கு பத்து பேர்கள் சிறு தொழில் துவங்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அரசு அங்கே தொழிற்பேட்டை அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி அந்த பத்து பேர்களும் உரிய விண்ணப்பங்களை அளிப்பார்

களேயானால், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் தகுந்த நிலத்தினை தேர்வு செய்து, அதற்கு பின்னாலே அரசு தொழில் பேட்டையை அமைக்க உரிய நடவடிக்கையை மேற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10–40.

2. சிறப்புக் குறிப்புகள்.

(அ) ஓர் உறுப்பினர் அவையில் பேசியது பற்றிய செய்தியை வானொலியில் ஒலி பரப்பாதது குறித்து.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் துணை மானியக் கோரிக்கை மீது பேசிய பேச்சுக்கள் முழுமையும் ரேடியோவில் இன்று 'சட்ட மன்ற நிகழ்ச்சி' என்ற அந்த நிகழ்ச்சியில் செய்திகள் இருட் டடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிச் செய்யப்பட்ட தற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. ஒருக்கால் அரசுத் தரப்பிலே சில விமர்சனங்கள் வந்த காரணத்தினால் அப்படி மறுக்கப்பட்டதோ என்ற சந்தேகம் எழுகிறது. எனவே, தாங்கள் அதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னிடம் கொடுத்தது வேறு— உங்களுடைய பெயர் அந்நிகழ்ச்சியில் சொல்லப்படவில்லை என்று. இப்பொழுது மொத்தமாக இருட் டடிப்புச் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்வது சரியல்ல. என்னிடம் நீங்கள் எதைக் கேட்கிறீர்களோ அதைப்பற்றித் தான் இங்கே வந்து நீங்கள் இந்த நேரத்திலே கிளப்பலாம். இதிலே நீங்கள் உள்நோக்கம் கற்பிக்கிறீர்கள். அதை நீங்கள் என்னிடத்திலே தெரிவிக்கவில்லை. மொத்தமாகச் செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கிறது என்பதை என்னிடத் திலே சொல்லியிருந்தால், அதை நான் அரசாங்கத்திற்குத் தெரி வித்து, அந்தத் துறைக்குத் தெரிவித்து, நான் அவர்களுடைய விளக்கத்தைக் கேட்டிருப்பேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானொலியோ, தொலை காட்சியோ மாநில அரசின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்து விட்டார்களோ என்னவோ என்று எண்ணத் தோன்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). நிச்சயமாகத் தொலைக் காட்சியிலோ வானொலி